பெரியகுளத்தில்

கஞ்சா வைத்திருந்தவர்கள் கைது

தேனி, ஜூன் 10: பெரியகுளம் நகர் மற்றும் பெரியகுளம் அருகே டி.கள்ளிப்பட்டியில் பள்ளி மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கஞ்சா வைத்திருந்தவர்களை போலீசார் கைது செய்தனர்.

பெரியகுளம் நகர் தென்கரையில் சோத்துப்பாறை செல்லும் சாலையில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி அருகே மாணவர்களுக்கு சட்டப்புறம்பாக கஞ்சா விற்கப்படுவதாக வந்த தகவலையடுத்து சப்.இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் தலைமையிலான போலீசார் ரோந்து சென்றபோது, அப்பகுதியில் சந்தேகப்படும்படியாக இருந்தவர்களை விசாரித்தனர். விசாரணையில் அவர்கள் பெரியகுளம் அருகே மேல்மங்கலம் கிராமத்தை சேர்ந்த தங்கப்பாண்டி(22), பெரியகுளம் மீனாட்சி படித்துறை பகுதியை சேர்ந்த பாலகணபதி(21), நாகேந்திரன் மனைவி முருகேஸ்வரி(42) என்பது தெரிய வந்தது. இதனையடுத்து அவர்கள் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த 180 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்து, மூவர் மீதும் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இதேபோல், பெரியகுளம் அருகே டி.கள்ளிப்பட்டியில் உள்ள ஒரு தனியார் மெட்ரிக் பள்ளி அருகே மாணவர்களுக்கு சட்டப்புறம்பாக கஞ்சா விற்கப்படுவதாக பெரியகுளம் தென்கரை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து, தென்கரை போலீஸ் சப்.இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் தலைமையிலான போலீசார் அப்பள்ளி அருகே ரோந்து சென்றனர். அப்போது சந்தேகப்படும்படி நின்றிருந்த டி.கள்ளிப்பட்டி, சாஸ்திரிநகரை சேர்ந்த தர்மராஜ் மகன் ஜெரால்டுபுஷ்பராஜ்(24) என்பவரிடம் போலீசார் விசாரணை நடத்தியபோது, அவரிடம் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக 50 கிராம் கஞ்சா வைத்திருந்தது தெரிய வந்தது. இதனையடுத்து, போலீசார் ஜெரால்டுபுஷ்பராஜ் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்து, அவரிடமிருந்து கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

வளைந்து நெளிந்து போகும் ஆறு

▶ பெரியாறு அணையில் இருந்து கடந்த ஜூன் 1ம் தேதி பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. அதே போல் தேனி மாவட்டம் முழுவதும் தென்மேற்கு பருவமழையையொட்டி பரவலாக மழை பெய்தது. இதன் எதிரொலியாக குன்னூர் வைகை ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து வளைந்து நெளிந்து செல்லும் காட்சி ரம்மியமாக உள்ளது.

மயிலாடும்பாறை அருகே

ரூ.28 லட்சத்தில் புதிய சமுதாயக்கூடம்

▶ மயிலாடும்பாறை அருகே மண்ணூத்து கிராமத்தில் ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடத்தை ஆண்டிபட்டி எம்எல்ஏ மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

ஆண்டிபட்டி எம்எல்ஏ திறந்து வைத்தார்

வருசநாடு, ஜூன் 10: கடமலை-மயிலை ஒன்றியம் குமணந்தொழு ஊராட்சிக்கு உட்பட்ட மண்ணூத்து கிராமத்தில் ரூ.28 லட்சத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டும் பணிகள் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்று முடிந்தது. இந்தக் கட்டிடத்தை நேற்று ஆண்டிபட்டி எம்எல்ஏ மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த விழாவில் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ மகாராஜன் பேசுகையில், கடமலைக்குண்டு மயிலாடும்பாறை ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் அடிப்படை வசதிகளை நம்முடைய திமுக அரசு செய்து கொடுத்து வருகிறது.

மேலும் வருகின்ற 2026ம் ஆண்டு அனைத்து தேர்தல்களிலும் திமுக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும் எதிர்த்து போட்டியிடும் கட்சிகள் அனைத்தும் டெபாசிட் இழக்க நேரிடும். அனைத்து பொதுமக்களுக்கும் இலவச வீட்டுமனை மற்றும் நஞ்சை புஞ்சைகள் பட்டா வழங்குவதற்கு சட்டமன்றத்தில் பேசியுள்ளேன். விரைவில் அனைவருக்கும் பட்டா கிடைக்கும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மகளிர் உதவித் தொகை அரசாங்க விதிகளுக்கு உட்பட்டு கிடைக்கும் என தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் கடமலை-மயிலை திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் வக்கீல் சுப்பிரமணி, வடக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி குறிஞ்சி மாடசாமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் மச்சகாளை, பிரபாகரன், ஊராட்சி செயலர் சந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விஎஸ்.ராமர், திமுக முக்கிய பிரமுகர்கள் தமிழன், மகாராஜன், மனோகரன், மதியழகன், மணிகண்டன், க.மயிலாடும்பாறை ஒன்றிய ஆணையாளர் ரவிச்சந்திரன், பொறியாளர் கார்த்திக், ஊராட்சி செயலர் துரைப்பாண்டி உள்ளிட்ட ஏராளமான திமுக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தென்னை மரம் ஏறும் போது

மின்சாரம் தாக்கி கூலித்தொழிலாளி பலி

ஆண்டிபட்டி, ஜூன் 10: தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே உள்ள கைலாசப்பட்டியில் அமைந்திருக்கும் ஷாஜகான் என்பவருக்கு சொந்தமான தென்னந்தோப்பிற்கு டி.புதூர் கிராமத்தை சேர்ந்த ஆண்டிச்சாமி தென்னங்காய் பறிக்கும் கூலித்தொழிலுக்கு சென்றுள்ளார். ஆண்டிச்சாமி தென்னை மரத்தில் ஏறி தேங்காய் இறக்க முயன்ற போது மரத்தின் அருகே சென்ற உயர் அழுத்த மின்கம்பி பச்சை மட்டையில் பட்டு கூலித்தொழிலாளி ஆண்டிச்சாமி தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே பலியானார். இதையடுத்து அவரது உடல் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பிரேத அறைக்கு கொண்டு வரப்பட்டது.

மருத்துவமனைக்கு வந்த அவரது மனைவி மற்றும் உறவினர்கள் உயிரிழந்த ஆண்டிச்சாமி குறித்து சம்பவம் நடந்த இடமான தென்னந்தோப்பின் உரிமையாளரும், தேங்காய் பறிக்கும் தொழிலை குத்தகைக்கு எடுத்தவரும் யாரும் விசாரிக்கவில்லை என்றும் உயிரிழந்த கூலிதொழிலாளி ஆண்டிச்சாமிக்கு ஒரு மனைவி மற்றும் 10 வயதில் மகனும் 8 வயதில் மகளும் உள்ள நிலையில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க உதவிட வேண்டும் என்றும் வலியுறுத்தி உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

▶ தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆண்டிச்சாமியின் உடலை வாங்க மறுத்து அவரது உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட க.விலக்கு காவல் துறையினர் கூலி தொழிலாளி குடும்பத்திற்கு உதவிட நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர். தொடர்ந்து உடலை வாங்க மறுத்துள்ள உறவினர்கள் கூலிதொழிலாளியின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்காவிட்டால் அடுத்த கட்டமாக போராட்டத்தில் ஈடுபட போவதாக தெரிவித்துள்ளனர்.

கரட்டுப்பட்டி கிராமத்தில்

சிறப்பு கிராம சபை கூட்டம்

வருசநாடு, ஜூன் 10: கடமலைக்குண்டு ஊராட்சி பழங்குடியினர் வசிக்கும் கரட்டுப்பட்டி கிராமத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம் தனி அலுவலர் மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு பார்வையாளராக வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன், பார்வையாளராக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில் வன உரிமை கிராம சபைக்கான தலைவர் மற்றும் செயலாளர் மற்றும் 15 உறுப்பினர்கள் அடங்கிய வன உரிமைக்குழு குழு தேர்வு செய்து ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் கிராம சபை தீர்மானங்களை ஊராட்சி செயலாளர் சின்னசாமி வாசித்து ஒப்புதலை பெற்றார்.

ஆண்டிபட்டியில் பரபரப்பு

வணிக வளாக சுவரில் கார் மோதி விபத்து

ஆண்டிபட்டி, ஜூன் 10: தேனி மாவட்டம், பெரியகுளம் பகுதியை சேர்ந்தவர் கண்ணன். இவர் நேற்று முன் தினம் குடும்பத்துடன் ஆம்னி காரில் திருநெல்வேலி பகுதிக்கு விசேஷ நிகழ்ச்சிக்காக சென்றார். பின்னர் மீண்டும் திருநெல்வேலியில் இருந்து காரில் பெரியகுளம் நோக்கி சென்றனர். நேற்று அதிகாலை தேனி நெடுஞ்சாலையில் ஆண்டிபட்டி பூக்கடை அருகில் வந்தபோது நாய் ஒன்று குறுக்கே பாய்ந்தது. நாய் மீது மோதாமல் இருப்பதற்காக காரை டிரைவர் திருப்பியுள்ளார். அப்போது கட்டுப்பாட்டை இழந்த கார் எதிர்பாராத விதமாக அருகில் இருந்த கடையின் தடுப்புகள் மற்றும் எச்சரிக்கை தடுப்பு கம்பிகள் மீது மோதி பின்னர் வணிக வளாகத்தின் முன் பகுதியில் மோதி நின்றது. இதில் காரில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் தப்பினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஆண்டிபட்டி போலீசார் காரில் பயணித்தவர்களை மீட்டு ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

▶ ஆண்டிபட்டியில் விபத்துக்குள்ளான கார்.

மீன் பிடிக்க சென்றவர் குளத்தில் மூழ்கி சாவு

திண்டுக்கல், ஜூன் 10: திண்டுக்கல் அருகே அனுமந்தநகர் மாதா கோவில் தெருவை சேர்ந்தவர் ஆரோக்கிய சாமி (40). கூலி வேலை செய்து வந்தார். இவருக்கு திருமணமாகி சாந்தி (35) என்ற மனைவியும், ரூபன் (15), ஹர்ஷினி ராஜ் (11) ஆகிய 2 மகன்களும் உள்ளனர். இவர் நேற்று முன் தினம் அந்த பகுதியில் உள்ள துலுக்கன் குளத்திற்கு மீன் பிடிக்க சென்றார். அப்போது அவர் ஆழமான இடத்துக்கு சென்றதாக கூறப்படுகிறது. இதனால் தண்ணீரில் அவர் மூழ்கியுள்ளார். அங்கிருந்தவர்கள் இதைப் பார்த்து உடனடியாக ஆரோக்கியசாமியை மீட்டு சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து திண்டுக்கல் தாலுகா போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணவேணி, சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் வனராஜன் ஆகியோர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குறைவான நகையை தந்தது குறித்த வழக்கில்

அடமானதாரருக்கு உரிய நகையை திருப்பித்தர உத்தரவு

தேனி, ஜூன் 10: தேனி, பென்னிகுக் நகரில் குடியிருப்பவர் ரவி மனைவி முத்துமாரி(44). இவர் கடந்த 2018ம் ஆண்டு குடும்ப செலவுக்காக அவரது 187 கிராம் எடையுள்ள தங்க நகைகளை தேனி நகர் மதுரை சாலையில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ரூ.3 லட்சத்திற்கு அடமானம் வைத்தார். பின்னர், இவரது குடும்ப விழாவிற்காக கடந்த 2018ம் ஆண்டு மே மாதம் 2ம் தேதி அசல் மற்றும் வட்டித் தொகையை முழுமையாக செலுத்தி திருப்பினார். நகையை திருப்பியபோது, மொத்தம் அடமானம் வைத்த 187 கிராம் எடை தங்கத்தில் 8 கிராம் நகை குறைவாக இருந்தது.

இது குறித்து, முத்துமாரி, வங்கி கிளை நிர்வாகத்தில் புகார் அளித்தார். இதற்கு, வங்கி நிர்வாகம் முறையாக பதில் அளிக்கவில்லை. இதுகுறித்து, முத்துமாரி, தேனி மாவட்ட போலீஸ் எஸ்.பி மற்றும் வங்கியின் கிளை மேலாளர், மண்டல மேலாளர், பொது மேலாளருக்கு புகார் அளித்தும் பலனில்லை. இதனையடுத்து, கடந்த 2025ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் தேதி வக்கீல் எஸ்.செல்வக்குமார் மூலமாக தேனி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வங்கி தேனி கிளைமேலாளர், மண்டல மேலாளர், பொதுமேலாளருக்கு எதிராக முத்துமாரி வழக்கு தாக்கல் செய்தார். இவ்வழக்கினை விசாரித்த நுகர்வோர் குறைதீர் ஆணைய நீதிபதி சுந்தரம், நுகர்வோர் குறைதீர் ஆணைய நீதிமன்ற உறுப்பினர் செளந்திரராஜன் ஆகியோர் கொண்ட அமர்வு விசாரணை முடிந்ததையடுத்து, நேற்று தீர்ப்பளித்தது.

தீர்ப்பில், வங்கியின் தேனி கிளை மேலாளர், மண்டல மேலாளர், பொது மேலாளர் ஆகியோர் பாதிக்கப்பட்ட முத்துமாரிக்கு ஒரு மாத காலத்திற்குள் ரூ.40 ஆயிரம் பெறுமானமுள்ள 8 கிராம் தங்க நகையை வழங்க வேண்டும், மன உளைச்சலுக்கான இழப்பீடாக ரூ.25 ஆயிரமும், சேவைக்குறைபாடு இழப்பீடாக ரூ.25 ஆயிரமும், வழக்குச் செலவுக்காக ரூ.10 ஆயிரத்தையும் ஒரு மாத காலத்திற்குள் வங்கி நிர்வாகம் பாதிக்கப்பட்ட முத்துமாரிக்கு வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில்

குச்சனூர், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம்

பசலி 1435 பொது ஏலம் / டெண்டர் அறிவிப்பு (முதலாம் அழைப்பு)

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குச்சனூர் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் கீழ்கண்ட பலவகை இனங்களுக்கு பசலி 1435க்கு (01.07.2025 முதல் 30.06.2026 வரை) அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கான பொது ஏலம் / டெண்டர் வருகின்ற 27.06.2025ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மேற்படி திருக்கோயிலில் வைத்து இந்து சமய அறநிலையத்துறை திண்டுக்கல், உதவி ஆணையர் முன்னிலையில் நடைபெறும். தேவையுள்ளவர்கள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் கோரலாம்.

வ. எண்	ஏல விபரம்	உரிம காலம்	முன் வைப்புத் தொகை	டெண்டர் படிவம் விலை
1.	மண் உருவம், மண்காகம் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி 1435-க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 முடிய)	ரூ.5,00,000/-	ரூ.200/-
2.	எள் பொட்டலம் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி 1435-க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 முடிய)	ரூ.10,00,000/-	ரூ.200/-
3.	தேங்காய் பழம், பூஜை பொருட்கள் விற்பனை செய்து கொள்ளும் உரிமம்	பசலி 1435-க்கு மட்டும் (01.07.2025 முதல் 30.06.2026 முடிய)	ரூ.5,00,000/-	ரூ.200/-

ஏல நிபந்தனைகள் மற்றும் முழு விபரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

பி.ஜெயதேவி, பி.ஏ.,பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்

இரா.ஜெயராமன், பி.ஏ.,
செயல் அலுவலர்

நாள்: 09.06.2025
இடம்: குச்சனூர்

வெ.ஆ.எண்: 145/25/செ.ம.தொ.அ/தேனி/நாள்: 09.06.2025

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனாவாலா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட், என அறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: 2வது தளம், டிகேஎஸ் டவர்ஸ், எண்.P/1/45/4, தேனி - கம்பம் பிரதான சாலை, TNEB எதிரில், பழனிச்செட்டிப்பட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு - 625531

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பங்கீக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(2)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 26/06/2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (மு.வி.-ல் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விக்லங்கங்கள் / நிதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
9	கடன் எண். HF0494H20100215 திருப்பதி உடையார் (கடன்தாரர்) கிருஷ்ணவேணி திருப்பதி	அறிவிப்பு தேதி: 08/09/2024 மொத்த நிலுவை: 08/09/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.971210/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்தொராயிரத்து இருநூறு பத்து மட்டும்) மற்றும் தொகையைச் செலுத்தும் வரையிலான ஆண்டுக்கு @17% வட்டி உட்பட.	கையக	SF எண் 403 D.No 66/W-2 ராமச்சந்திராபுரம், கண்டமனூர், வல்லநதி கிராமம், ஆண்டிபட்டி தாலுக்கா, தேனி மாவட்டம் பரப்பளவு 881.88.ச.அடி. கோவில் பின் குறியீடு- 625517 அனைத்து துண்டு மற்றும் பகுதி **எல்லை:- கிழக்கு:-** வேலப்பன் வீடு, **மேற்கு:-** காளிமுத்து தேவர் வீடு, **வடக்கு:-** முத்துசாமி வீடு, **தெற்கு:-** 15 அடி சாலை	Rs. 11,60,000- (ரூபாய் பதினொரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)	Rs. 1,16,000/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினாறாயிரம் மட்டும்)	25/06/2025 Before 5 PM	10,000/-	19/06/2025 (11AM – 4PM)	26/06/2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை
10	கடன் எண். HF0494H21100298 ராம்கி (கடன்தாரர்) ரதி எம் (உப – கடன்தாரர்) பொன்ராம் எம் (உப-கடன்தாரர்) பிரியா கே (உப-கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 07/02/2024 மொத்த நிலுவை: 07/02/2024 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.852653/-(ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பத்திரண்டு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மூன்று மட்டும்) மற்றும் தொகையைச் செலுத்தும் வரையிலான ஆண்டுக்கு @18% வட்டி உட்பட.	கையக	சர்வே எண் 2058/6b2 டவுன் வார்டு 7 பழைய கதவு எண் 78 புதிய கதவு எண் 3 காளியம்மன்கோவில் தெரு உத்தமபாளையம் உத்தமபாளையம் கிராமம் மற்றும் டவுன் பஞ்சாயத்து உத்தம பாளையம் தாலுகா தேனி மாவட்டம் அளவீடு 1343.75.சதுர அடி. பின் குறியீடு- 625533 **எல்லை:- கிழக்கு:-** கிழக்கு மேற்கு 6 அடி பாதை, **மேற்கு:-** குருசாமி நாடார் வீடு, **வடக்கு:-** லோகமணி பிரகாஷ் பிரேம்குமார் வீடு மற்றும் காலி நிலம், **தெற்கு:-** தெரு 10 அடி	Rs. 10,44,000/- (ரூபாய் பத்து லட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்)	Rs. 1,04,400/- (ரூபாய் ஒரு லட்சத்து நான்காயிரத்து நானூறு மட்டும்)	25/06/2025 Before 5 PM	10,000/-	19/06/2025 (11AM – 4PM)	26/06/2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வரிகளங்கங்கள், முன்றாம் நபர் கோகுறிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் செல்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்திபடு வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்ப. எந்தவிதமான செலவுகளையும் வெற்றிதாரான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண் –68, 3,ஆவது தளம், குர்கான், ஹரியானா –122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண். 9948182222 மூலமாகவோ தொடர்புகொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும்.ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/ RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்–000651000460 மற்றும் IFSC Code- ICIC0000006, 20, R.N.முகர்ஜி சாலை, கொல்கத்தா–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது அட்டவணை வங்கியிலோ **25/06/2025 தேதி** அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை **எண்.1510. 2வது தளம், ஸ்ரீ காம்ளெக்ஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641018** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com-ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்–2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

தேதி: 10.06.2025, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிட்., என்றறியப்பட்டது)

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777 9.30 AM - 6.00 PM